கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 228/2019

வா.சா.1– சக்திவேல் த/பெ.ராமசாமி

06–06–2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி ஆஜர். பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதிகள் வழக்கறிஞர்கள் ஆஜர்.

1) தாவாவின் பிரதிவாதிக்கு தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் வழக்கறிஞரிடம் சொல்லி இருந்தேன். அவர் என்ன செய்தார் என்று தெரியவில்லை வாதிகளின் சொத்து க.ச.410 எல்லைக்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் தடபாத்தியம் கோரும் சொத்து க.ச.409 எல்லைக்குள் வருகிறது என்றால் சரிதான். க.ச.409 சொத்து பிரதிவாதி பெயரிலுள்ளது என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.1 ஆவணம் 1ம் வாதியின் தாயார் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொத்து விவரத்தில் க.ச.409/1பி ல் கால்நடை, வண்டி வாகனாதிகள் ஓட்டிக் கொள்வதற்கு என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.2 பாக பாத்திய பத்திரம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன்படி 2வது பட்டியலிட்ட சொத்து எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ.2 ஆவணத்தில் கால்நடைகள் வண்டி வாகனங்கள் செல்வதற்கும் நடந்து கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் வண்டி வாகனங்கள் செல்வதற்கு என்று தான் எழுதப்பட்டுள்ளது வா.சா.ஆ.2ல் நாங்கள் நடந்து கொள்வதற்கு சகிதமும் என எழுதிக் கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் எங்களுடைய வசதிக்கு ஏற்ப வா.சா.ஆ.1ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கு மாறாக ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல.

4) 29.11.1982ம் தேதி பிரதிவாதிக்கு என் தாயார் தான பத்திரம் ஏற்படுத்தினார் என்றால் சரி 5 சகோதரர்களுக்கும் ஏற்படுத்தினார். தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் என் தாயார் யாருக்கு ஆவணங்களை ஏற்படுத்தினார்களோ அவர்கள் மட்டும் தான் பாதையை பயன்படுத்தவேண்டும் என எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் தவறு.

பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் சரியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது அதை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சொத்துக்கும் பிரதிவாதியின் சொத்துக்கும் இடையில் நாச்சம்மாள் சொத்துள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் ஆவணத்தில் பாதையை நாச்சம்மாள் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்து எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

5) பெரியசாமி வா.சா.ஆ.4 ன்படி அவர் சொத்தை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் க.ச.410/2 காலையின் தென்புறத்தில் மேல்கோடாக விடப்பட்டுள்ள 16 அடி அகல கிழமேல் பாதை எனச் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளுக்கு வா.சா.ஆ.4 ல் சொல்லப்பட்டுள்ள பொது பாதை தற்சமயம் வரை வாதிகளின் பாதையாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 37 வருடத்திற்கு பிறகு பிரதிவாதிகளின் சொத்தில் நுழைய முற்பட்டதால் தான் நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதுஎன்றால் சரிதான். விசாரணைக்கு சென்றேனா என்றால் சென்றேன்.

6) பிரதிவாதியின் சொத்தில் உள்ள வழித்தடத்தை வாதிகள் பயன்படுத்தி வருவது குறித்து ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாவில் கோரி உள்ள பரிகாரம் பெற வாதிகளுக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிக்கு வழிநடை பாத்தியம் கொடுக்கப்பட்டு அனுபவித்து வருவதால் பிரதிவாதியின் சொத்தை இடைஞ்சல் செய்வதற்கோ பயன்படுத்துவதற்கோ உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவாவில் கோரி உள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் தாவா தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)
திருப்பூர்.